இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 09-04-2025

# ஏழு ஒப்பந்தத்தில் ஏன் இல்லை கச்சத்தீவு?

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஏழு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளது.

* இந்தியா - இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கை.
* இந்தியா - இலங்கைக்கு இடையிலான எரிசக்தி இறக்குமதி மற்றும் ஏற்றுமதி புரிந்துணர்வு ஒப்பந்தம்.
* இந்தியா - இலங்கைக்கு இடையில் டிஜிட்டல் தொழில்நுட்பம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம்.
* இந்தியா - இலங்கை - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய மூன்று நாடுகளுக்கு இடையில் திருகோணமலை எரிசக்தி தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம்.
* கிழக்கு மாகாணம் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை
* இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையில் சுகாதாரம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம்
* இந்தியாவின் மருத்தக நிறுவனம் மற்றும் இலங்கை தேசிய மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கு இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை.

- ஆகிய ஏழு ஒப்பந்தங்கள் கையெழுத்து ஆகி இருக்கிறது. இந்த ஏழு ஒப்பந்தத்தில் ஏன் இல்லை கச்சத்தீவு?

**2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் திடீரென்று கச்சத்தீவைப் பற்றி இந்தியாவின் பிரதமர் பேசினார். உள்துறை அமைச்சர் பேசினார். வெளியுறவுத் துறை அமைச்சர் பேசினார். பாதுகாப்புத் துறை அமைச்சர் பேசினார். நிதி அமைச்சர் பேசினார். இவர்கள் அனைவரும் பேசியதைப் பார்க்கும் போது கச்சத்தீவுக்காக இலங்கை மீது இந்தியா படையெடுக்கத் திட்டமிட்டிருக்கிறதோ என்ற அச்சம் ஏற்பட்டது. அந்தளவுக்கு பேசினார்கள்.**

ஆனால் இலங்கைக்குச் சென்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், அங்கே 'கச்சத்தீவு' என்ற வார்த்தையே பயன்படுத்தவில்லை. எப்போது சொல்லி இருக்க வேண்டுமோ அப்போது சொல்ல வில்லை.

இந்திய பிரதமர்களில் இலங்கைக்கு மிகமிக நெருக்கமான பிரதமராக தன்னைக் காட்டிக் கொள்ளக் கூடியவர் இன்றைய பிரதமர் நரேந்திர மோடிதான்.

இந்த பத்தாண்டு காலத்தில் நான்கு முறை இலங்கைக்குச் சென்றிருக்கிறார். தன்னுடைய நட்புறவை நெருக்கமாகக் காட்டுவதில் துடியாகத் துடிக்கிறார் மோடி. இந்தியப் பிரதமர் ஆனதும் 2015 ஆம் ஆண்டே இலங்கைக்குச் சென்றார் மாண்புமிகு மோடி. 2017 ஆம் ஆண்டும் சென்றார். 2019 ஆம் ஆண்டும் சென்றார்.

இப்படி அவர் செல்லும் பயணத்தில் இது நான்காவது முறை.

கோவிட் பெருந்தொற்று காலத்தில் இலங்கைக்கு தேவையான தடுப்பூசிகளை வழங்கிய முதல் நாடாக இந்தியா இருந்தது. 2022-ஆம் ஆண்டில், இலங்கை மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டபோது, 4 பில்லியன் டாலர் வழங்கியது. இப்படி தன்னுடைய நல்லெண்ணத்தை பிரதமர் மோடி வெளிப்படுத்திக் கொண்டே இருந்தார்.

இதையெல்லாம் மனதில் வைத்துத் தான் பிரதமர் மோடிக்கு அந்த நாட்டின் அதி உயர் விருதான ஸ்ரீலங்கா மித்திர விபூஷண விருது வழங்கப்பட்டுள்ளது. இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதனை வழங்கி இருக்கிறார். இதையெல்லாம் வைத்து பார்க்கும் போது இலங்கை அரசு அவரை பெருமைக்குரியவராக, மதிப்புக்குரியவராக, கௌரவத்துக்குரியவராக நினைப்பதாகவே தெரிகிறது. இந்த நல்ல சூழலைப் பயன்படுத்தி கச்சத்தீவுக்கு ஒரு ஒப்பந்தம் போட்டிருக்கலாமே? அப்படி எந்த ஒப்பந்தமும் போடப்படவில்லை.

**இதை விடக் கொடுமை என்ன என்றால்... இந்தியப் பிரதமர் மோடியும், இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் கூட்டாகச் செய்தியாளர்களைச் சந்தித்துள்ளார்கள். "இலங்கை மற்றும் இந்திய மீனவப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை எட்ட நடவடிக்கை எடுக்குமாறு நான் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரிக்கை வைத்தேன்" என்று இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவிக்கின்றார்.**

**இந்தியச் சிறைகளில் இலங்கை மீனவர்கள் இருக்கிறார்களா? இலங்கை மீனவர்களை நாம் கொல்கிறோமா? சிறை வைக்கிறோமா? படகுக்கு பல கோடி அபராதம் போடுகிறோமா? வலையை அறுக்கிறோமா? படகை உடைக்கிறோமா? மீன்களைப் பறிக்கிறோமா? இது எதையும் இந்தியா செய்யவில்லை. செய்வது அந்தப் பக்கம். ஆனால் இலங்கை ஜனாதிபதி சொல்கிறார், 'இறுதித் தீர்வை எட்ட வேண்டும்' என்று. இந்திய பிரதமர் அதற்கும் தலையாட்டி விட்டு வந்திருக்கிறார்.**

தடை செய்யப்பட்ட மீன்பிடி இழுவை முறைகளை நிறுத்துங்கள் என்றும், அரியவகை மீன்களைப் பிடிப்பதை நிறுத்த வேண்டும் என்றும் இலங்கை கோரிக்கை வைத்திருக்கிறது. அதனையும் கேட்டுக் கொண்டு வந்துள்ளார் இந்தியப் பிரதமர்.

'மனிதாபிமான முறைப்படி நடந்து கொள்வோம்' என்று இலங்கை சொன்னதாக இந்தியப் பிரதமர் சொல்லி இருக்கிறார். மனிதாபிமான அடிப்படை என்றால் இலங்கை சிறையில் இருக்கும் மீனவர்கள் அனைவரையும் விடுவிப்பது அல்லவா மனிதாபிமானம்? அதைச் செய்ததா இலங்கை?

கடந்த மார்ச் 25 ஆம் தேதியன்று நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு ஜெய்சங்கர், 97 இந்திய மீனவர்கள் இலங்கைச் சிறையில் இருக்கிறார்கள் என்றும், அதில் 83 பேர் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்றும் சொல்லி இருக்கிறார். அவர் சொன்ன இரண்டு நாள் கழித்து 11 பேரை கைது செய்தது இலங்கை. அப்படியானால் மொத்தமாக இலங்கைச் சிறையில் இருப்பவர்களின் எண்ணிக்கை 108 ஆகும். இதில் 11 பேரை மட்டும் பிரதமர் மோடி சென்ற அன்று விடுதலை செய்திருக்கிறார்கள். இன்னும் 97 பேர் இலங்கை சிறையில் தான் இருக்கிறார்கள். எங்கே போனது மனிதாபிமானம்? எப்போது இவர்கள் விடுதலை ஆவார்கள் என்றாவது அறிவிக்கப்பட்டதா? இல்லை.

கடந்த 2024 ஆம் ஆண்டு மட்டும் 560 மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இது இந்தியாவுக்கு அவமானம் அல்லவா?

**இலங்கையில் இருந்து ஹெலிகாப்டரில் 'ராமர் பாலத்தை' பார்த்தபடி ராமேஸ்வரம் வந்த பிரதமர், 'இந்த பத்தாண்டு காலத்தில் 3100 மீனவர்களை மீட்டுள்ளோம்' என்று பேசி இருக்கிறார். 3100 மீனவர்களை கைது செய்யும் துணிச்சல் இலங்கைக்கு யாரால் வந்தது?**

**'பா.ஜ.க. ஆட்சி அமைந்தால் ஒரு மீனவர் கூட கைது செய்யப்பட மாட்டார்' என்று 2014 ஆம் ஆண்டு பிரதமர் ஆவதற்கு முன்னால் சொன்னது யார்? இதே மோடி தான். 3100 மீனவர்கள் கைதானது யாருடைய ஆட்சி காலத்தில் அதே மோடி ஆட்சி காலத்தில் தான்.**

இலங்கை பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தத்திலும் கையெழுத்து போட்டிருக்கிறார்கள். இலங்கைக்கு அச்சுறுத்தலாகத்தான் இந்திய மீனவர்கள் சொல்லப்படுகிறார்கள் என்பது மாண்புமிகு மோடி அவர்கள் அறிவாரா?

**இனியாவது எந்தவொரு மீனவரும் கைது செய்யப்பட மாட்டார் என்று உறுதிமொழி வாங்கி வந்துள்ளீர்களா 'ஸ்ரீலங்கா மித்திர விபூஷணா'?!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (7.4.2025) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் 2025 – 2026ஆம் ஆண்டிற்கான வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் அன்சுல் மிஸ்ரா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் டாக்டர் எஸ்.பிரபாகர், முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் இணை மேலாண்மை இயக்குநர் விஜயகார்த்திகேயன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் ஜி.எஸ்.சமீரன், நகர் ஊரமைப்பு இயக்குநர் பி.கணேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### திராவிட இயக்கத் தலைவர்

# டபிள்யூ.பி.ஏ. சௌந்தரபாண்டியனாருக்கு மணிமண்டபம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஏப். 9 -**

**திராவிட இயக்கத் தலைவர்களில் ஒருவரான டபிள்யூ.பி.ஏ. சௌந்தரபாண்டியனார் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.**

நேற்று முன்தினம் (07.04.2025), தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சட்டமன்ற உறுப்பினர் பால் மனோஜ் பாண்டியன் டபிள்யூ.பி.ஏ.சௌந்தரபாண்டியன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைத்திட வேண்டுமென்று வைத்த கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர்



மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த பதில் வருமாறு:-

பேரவைத் தலைவர் அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர் பால் மனோஜ் பாண்டியன் அவர்கள் திராவிட இயக்கத்தினுடைய தலைவர்களில் ஒருவரான சௌந்தரபாண்டியனார் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்.

உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று இந்தப் பேரவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிலளித்தார்.

### திருப்பூர் மாநகராட்சி வாவிபாளையம் உயர்நிலைப்பள்ளியில்

# பேராசிரியர் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டிடம் கட்ட நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தகவல்!

சென்னை, ஏப்.9 -

திருப்பூர் மாநகராட்சி 5வது வார்டு வாவிபாளையம் உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டப்படுமா என்று உறுப்பினரின் கேள்விக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிலளிக்கையில் பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நபார்டு வங்கியின் மூலமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு பள்ளிக் கட்டடம் கட்டப்படும் என்று தெரிவித்தார்.



இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**கே.என்.விஜயகுமார்:** திருப்பூர் (வடக்கு) தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, 5வது வார்டு, வாவிபாளையம் உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** இதற்கான கருத்துரு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடம் பெறப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் கல்வியாண்டில், பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நபார்டு வங்கியின் மூலமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பள்ளிக் கட்டடம் கட்டும் பணிகள் துவங்கப்படும்.

**கே.என்.விஜயகுமார்:** வாவிபாளையம் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டித்தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்கிற இதே பள்ளியில் ஏற்கெனவே நான் ஆய்விற்கு வந்திருக்கிறேன். ஏற்கெனவே நான் அந்தப் பள்ளிக்கூடத்தை நேரடியாக பார்த்தவன் என்ற முறையில், நீங்கள் சொல்கிற மாதிரி 10ல் even 12 வகுப்பறைகள் நமக்கு தேவைப்படுகிறது. ஒரு நான்கு கழிவறைகள், கிட்டத்தட்ட அந்தப் பள்ளியில் strength மட்டும் இப்போது சுமார் 498 மாணவர்கள் இன்றைக்கு தமிழ் வழி மற்றும் ஆங்கில வழியில் படித்துக்கொண்டிருக்கிறார்கள். 2011-2012 ஆம் ஆண்டு இந்தப் பள்ளியின் தரம் உயர்த்தப்பட்டது என்று சொன்னால், நீங்கள் கேட்கின்ற மாதிரியான இந்த ஆண்டு நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால் கூடுதலாக ஆயிரம் கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. NABARD மூலமாகவும் இந்த நிதியைப் பெற்று, எவ்வளவு விரைவாக, பள்ளி மாணவச் செல்வங்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரமுடியுமோ, கண்டிப்பாக நாங்கள் செய்வோம் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கே.என்.விஜயகுமார்:** திருப்பூர் (வடக்கு) சட்டமன்ற தொகுதி உட்பட, திருப்பூர் மாநகராட்சி பகுதி வார்டு எண் 18, பாப்பநாயக்கன்பாளையம் நடுநிலைப் பள்ளியில் சுமார் 408 மாணவ மாணவியர்கள் படித்து வருகின்றனர். இந்தப் பள்ளியில் பத்தாம் வகுப்பு வரை தரம் உயர்த்தி, தரவேண்டும், ஏனென்று கேட்டால் தென் மாவட்ட மக்கள் எல்லாம் அதிகமாக வசித்து வரும் பகுதியாக உள்ளதால் இப்பள்ளியில் படிக்கும் மாணவ-மாணவிர்கள் மேல் படிப்பிற்காக தொலைத் தூரத்தில் உள்ள பள்ளிக்கு செல்லவேண்டிய நிலை உள்ளது. அங்கு சரியான போக்குவரத்து வசதி இல்லாததனால் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, மைச்சர் அவர்கள் பாப்பநாயக்கன்பாளையம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தவேண்டுமென்று, பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** பள்ளி தரம் உயர்த்துவது குறித்து உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 1950-ஆம் ஆண்டுகளில் பார்த்தீர்களென்றால், 4 கிலோமீட்டர், 8 கிலோமீட்டர் தொலைவில் நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகள் என்கிற concept இருந்தது. முதன்முதலாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காலத்தில்தான், ஒரு கிலோமீட்டர் தொலைவில் ஆரம்பப் பள்ளி இருக்கவேண்டும், 3 கிலோ மீட்டர் தொலைவில் நடுநிலைப் பள்ளி இருக்கவேண்டும், 5 கிலோமீட்டர் தொலைவில் உயர்நிலைப் பள்ளி இருக்க வேண்டும், 7 கிலோமீட்டர் தொலைவில் மேல்நிலைப் பள்ளி இருக்கவேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) concept அப்போதுதான் நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

இப்போது நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, பள்ளி தரம் உயர்த்தும் போது High School கிட்டத்தட்ட 5கிலோமீட்டருக்குள் எதாவது, அரசு பள்ளி, அரசு உதவிப்பெறும் பள்ளி இருந்தது என்று சொன்னால், அந்த விதிமுறைக்குட்படாமல் அது வராது. ஆனால், அப்படி இல்லாத பட்சத்தில் கண்டிப்பாக நம்முடைய CEOs மூலமாக கருத்துருப் பெறப்பட்டு, அதற்கான உரிய நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.




தமிழ்நாடு ஆதிதிராவிட வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகத் தலைவராக (தாட்கோ) புதிதாகப் பொறுப்பு ஏற்றுள்ள மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என்.இளையராஜா, நாகை மாவட்டம் திருக்குவளையில் உள்ள கலைஞர் பிறந்த இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கீழையூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் சோ.பா.மலர்வண்ணன், பொதுக்குழு உறுப்பினர் கோசி.குமார், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இளைஞர் அணி பி.என்.கார்த்தி, மாணவர் அணி ப.உதயக்குமார் மற்றும் பலர் உள்ளனர்.